Total Questions -100
Total Marks(1x1.5) - 150 Marks

Time -1 ½ Hours

**1. பிள்ளைத்தமிழ் பருவங்களில் பின்வருவனற்றுள் பொருந்தாதைக் கூறு:**
A. கழங்கு
B. அம்மனை
C. சிறுதேர்
D. ஊசல்

**2. சரியானதைத் தேர்ந்து எடு:**
A. ய ர ள வ ழ ல ற ன
B. ய ர ழ வ ல ள ற ன
C. ய ர ல வ ழ ள ற ன
D. ய ர ல வ ள ழ ற ன

**3. கன்னி பாலனாய் காசினி தனிலவ தரித்து மன்னு ஜீவகோடிகளெல்லாம் வான் கதி இவ்வரிகளைப் பாடியவர்?**
A. வள்ளலார்
B. கிருட்டிணனார்
C. உமறுப்புலவர்
D. மாணிக்க வாசகர்

**4. திவ்விய கவி, யாருடைய அவையில் ஓர் அலுவலராக பணி செய்தார்?.**
A. திருமலை நாயக்கர்
B. திருச்சி சொக்க நாதர்
C. ராணி மங்கம்மாள்
D. அரங்க கிருட்டின முத்து வீரப்பன்.

**5. *பொருத்துக:***

| | |
|---|---|
| **1. மூதூர்** | **A. ஈறு போதல்** |
| **2. வெற்றிலை** | **B. ஆதி அகரம் ஐ ஆதல்** |
| **3. பைங்கூழ்** | **C. ஆதி நீடல்** |
| **4. கரு விழி** | **D. தன்னொற்று இரட்டல்** |

A. 1(B), 2(D),3(A), 4(C)
B. 1(C), 2(D),3(B), 4(A)
C. 1(B), 2(A),3(D), 4(C)
D. 1(C), 2(B),3(D), 4(A)

**6. முந்தையிலிருந்து நாட்டோர் கொடுப்பின் நஞ்சும் உண்பர் நனிநாகரீகர் இவ்வரிகள் இடம் பெற்றுள்ள நூல்?**
A. திருக்குறள்
B. நான்மணிக்கடிகை
C. நாலடியார்
D. நற்றிணை

**7. கீழ்க்கண்டவற்றுள் பொருந்தாதை சொல்லை கண்டறிக:**
C. கிழவி
D. பதம்

**8. பின் வருவனவற்றுள் தேவதேவன் எழுதிய நூல்களில் பொருந்தாதது:**
A. குளித்து கரை ஏறாத கோபியர்கள்
B. காலடி படாத தேசங்கள்
C. நுழைவது வாயிலைத் தாண்டாத கோலங்கள்
D. பூமியை உதறி எழுந்த மேகங்கள்.

**9. பழந்தமிழர் நாளை மதியம் 12 மணியிலிருந்து கணக்கிட்டனர் என்று கூறும் எட்டுத் தொகை நூல் எது?**
A. புறநானூறு
B. பரிபாடல்
C. நற்றிணை
D. ஐங்குறு நூறு
D. பதம்

**10. *பின்வரும் கூற்றுகளில் தவறானது எது?***
**1. ஒற்றள படை, உயிர் அளபெடை என்று அளபெடை இரு வகைப்படும்.**
**2. செய்யுள் இசை அளபெடை, இன்னிசை அளபெடை, சொல்லிசை அளபெடை என்று உயிர் படை மூன்று வகைப்படும்.**
**3. உயிர் அளபெடையின் மாத்திரை அளவு இரண்டு.**
**4. ஒற்றள படையின் மாத்திரை அளவு ஒன்று.**
A. 1, 2
B. 2, 3
C. 3, 4
D. 1, 4

**11. *கால்டுவெல் பற்றி பின்வரும் கூற்றுகளில் சரியானது:***
**1. இவர் 1815 ம் ஆண்டு பிறந்தார்**
**2. "திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம்" என்ற நூலை 1857 ல் எழுதினர்.**
**3. திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் என்ற நூலிற்க்காக தமிழில் இருந்து போற்றத்தக்க 600 செய்யுள்களை எடுத்தாண்டு உள்ளார்.**
**4. 'திராவிடம்' என்ற சொல்லை முதன் முதலில் பயன்பாட்டிற்கு கொண்டு வந்தவர் இவராவார்.**
A. 1, 2, 3 சரி
B. 1, 3, 4 சரி
C. 2, 3, 4 சரி
D. 1, 2, 4 சரி

**12.பொருள் முதல் ஆறோடு அளவை சொல்தானி கருவி காரியம் கருத்தன் ஆகியுள் ஒன்றன் பெயரான் அதற்கியை பிறிதைத் தொன்முறை உரைப்பன என ஆகுபெயர்களை பற்றி கூறிய நூல் எது?**

A. நன்னூல்

B. தொல்காப்பியம்

C. அகத்தியம்

D. இலக்கண விளக்கம்.

**13. பின் வரும் பாடல்களில் கண்ணதாசனின் சொல்லாட்சியை விளக்கும் பாடல்?**

A. முத்தான முத்தல்லவோ

B. எல்லாரும் எல்லா வளமும் பெற வேண்டும்

C. உண்மையை சொல்லி, நன்மை செய்தால்

D. காலை மணியோசை, களத்து மணியோசை

**14. திருவள்ளூர் மாவட்டத்தில் உள்ள கூடியம் மலைக் குகையில் உள்ள தெய்வத்தின் பெயர்?**

A. முருகன்

B. மனத்தச்சம்மன்

C. சிவன்

D. விநாயகர்

**15. மனித வீறு என்ற இதழை நடத்தியவர்?**

A. சாலை இளந்திரையன்

B. ஆறுமுக நாவலர்

C. ஷாலினி இளந்திரையன்

D. மறைமலை அடிகள்

**16.** *பொருத்துக:*

**கலித்தொகையின் பிரிவுகள் பாடல்கள்**

| | |
|---|---|
| **1. குறிஞ்சி** | **A. 35** |
| **2. முல்லை** | **B. 29** |
| **3. மருதம்** | **C. 33** |
| **4. நெய்தல்** | **D. 17** |

A. 1(B), 2(D),3(A), 4(C)
B. 1(C), 2(D),3(A), 4(B)
C. 1(B), 2(A),3(D), 4(C)
D. 1(A), 2(D),3(C), 4(B)

17. **கெலன் கெல்லர் பற்றிய கூற்றுகளில் பின்வருவனற்றுள் சரியானது எது:**

**1. மாற்றுத் திறனாளிகளில் முதன் முதலில் பட்டம் பெற்றவர் இவரே.**

**2. கெலன் கெல்லர் தன வாழ்நாள் முழுவதையும் இலக்கியதிதற்காகச் செலவிட்டார்.**

**3. இவர் மொழி பெயர்ப்பாளர் ஒருவரின் உதவியுடன் உலகம் எங்கும் சுற்றித் திரிந்து "கெலன் கெல்லர்" என்ற நிதியை துவங்கி அதில் சேர்ந்த ஒன்னரை கோடி ரூபாயை காது கேளாதோர் மற்றும் பார்வை அற்றோர் பள்ளிகளுக்கு வழங்கினார்.**

**4. ஆசிரியர் பாலிதாம்சன் இறந்து விட மொழி பெயர்ப்பாளர் அன்னி சல்லிவன் என்பவரின் உதவியுடன் வாழ்ந்து வரலானார்.**

A. 1, 2 சரி

B. 1, 3 சரி

C. 1, 4 சரி

D. 2, 4 சரி

**18. அயோத்தி தாசரின் பிள்ளைகளில் பொருந்தாதவர்:**

A. சுந்தர ராமன்

B. ராசா ராமன்

C. பட்டாபி ராமன்

D. அம்பிகா

**19. அப்பா! நான் வேண்டுதல்கேட் டருள்புரிதல் வேண்டும்**
ஆருயிர்க்கெல்லாம் நான் அன்பு செயல் வேண்டும்!
மேற்கண்ட வள்ளலார் பாடிய பாடலில் பயின்று வரும் அணி என்ன?

A. உயர்வு நவிற்சி அணி

B. இயல்பு நவிற்சி அணி

C. உவமை அணி

D. தற்குறிப்பேற்ற அணி

**20. இலத்தின் மொழியில் "லிப்ரா" என்பது?**

A. நூலகம்

B. புத்தகம்

C. நாள்

D. குறிப்பு

**21. திரு.வி.க குறித்து பின் வருவனற்றுள் சரியானதை கூறுக:**

1. இவர் ஆங்கில மொழியில் மிகுந்த புலமை பெற்று இருந்தார்.

2. காந்தி தமிழகம் வந்த பொது எல்லாம் அவருடைய மேடை பேச்சுக்களை தமிழில் மொழி பெயர்த்தவர் இவரே.

3. இவர் பேசுவது போலவே எழுவது, எழுவது போலவே பேசுவது எனும் முயற்சியில் வெற்றி கண்டவர்.

4. அண்ணா உள்ளிட்ட அக்கால இளைஞர்களை உணர்ச்சி மிகு பேசினால் தன்பால் ஈர்த்தவர் திரு.வி.க

A. 1, 2 சரி

B. 2, 3 சரி

C. 3, 4 சரி

D. அனைத்தும் சரி.

**22. பொருந்தாதை கூறு:**
1. பிறவி பெருங்கடல் நீந்துவார் ஏகதேச உருவக அணி
2. அன்பகத்தில்லா உயிர்வாழ்க்கை இல்பொருள் உவமை அணி
3. தீயினாற் சுட்ட புண் உவமை அணி
4. அன்பும் அறனும் உடைத்தாயின் நிரல் நிறை அணி

A. 1
B. 2
C. 3
D. 4

**23. மணிமேகலா தெய்வம் மணிமேகலைக்கு கொடுத்த மந்திரங்களில் பொருந்தாதது:**
1. வான் வழியே செல்ல
2. இளமை குன்றாமல் இருக்க
3. பசியற்று இருக்க
4. நினைத்த உருவத்தை எடுக்க

A. 1
B. 2
C. 3
D. 4

**24. பொருத்துக:**
1. குட்டி திருக்குறள் A. தொன்னூல் விளக்கம்
2. குட்டி திருவாசகம் B. கந்தர் கலிவெண்பா
3. குட்டி கந்த புராணம் C. திருக்கருவை பதிற்றுப்பத்து அந்தாதி
4. குட்டி தொல்காப்பியம் D. நாலடியார்

A. 1(B), 2(D),3(A), 4(C)
B. 1(D), 2(B),3(C), 4(A)
C. 1(B), 2(A),3(D), 4(C)
D. 1(D), 2(C),3(B), 4(A)

**25. பின்வரும் பதிற்றுப்பத்து பாடல்களை பாடல்களின் தலைவன் மற்றும் பாடியவர் என்ற முறையில் பொருத்துக:**
1. 5 ம் பத்து a. செல்வக் கடுங்கோ வாழியனாதன் i) அரிசில் கிழார்
2. 6 ம் பத்து b. கடல் பிறகோட்டிய செங்குட்டுவன் ii) பரணர்
3. 7 ம் பத்து c. ஆறுகோட்பாடு சேரலாதன் iii) காக்கை பாடினியார்
4. 8 ம் பத்து d. தகடூர் எறிந்த இளஞ்சேரல் இரும்பொறை iv) கபிலர்

A. 1(b)(ii), 2(c)(i),3(b)(iv),4(a)(iii)
B. 1(b)(i), 2(d)(ii),3(c)(iii),4(a)(iv)
C. 1(b)(ii), 2(c)(iii),3(a)(iv),4(d)(i)
D. 1(d)(iii), 2(b)(iv),3(c)(ii),4(a)(i)

**26. மங்கம்மாள் காலத்தில், காவேரி ஆற்றின் குறுக்கே ஆணை கட்டிய மன்னனின் பெயர்?**
A. நரசப்பையன்
B. சிக்கதேவராயன்
C. ரவிவர்மன்
D. ஷாஜி

**27. பொருந்தாதை தேர்ந்து எடு:**
1. சுழன்றும் ஏற்பின்னது உலகம் அதனால் உழன்றும் உழவே தலை உலகம் உருண்டையானது
2. தொடிப்புழுதி காச உனக்கின் பிடித்தெருவும் வேண்டாது சாலப் படும் களை பறித்தல்
3. செய்தக்க அல்ல செயக்கெடும் செய்தக்க செய்யாமை ஆயினும் கெடும் குற்றம்
4. கடிதொச்சி மெல்ல எறிக நெடிதாக்கம் நீங்காமை வேண்டு பவர் சட்டம்

A. 1 மட்டும்
B. 2 மட்டும்
C. 3 மட்டும்
D. 4 மட்டும்

**28. பொருத்துக :**
1. அண்டப் பகுதியின் உண்டைப் பிறக்கம் a) குறுந்தொகை i) மண்ணியல் அறிவு
2. செம்புல பெயல் நீர்போல் b) சிலப்பதிகாரம் ii) எந்திரவியல் அறிவு
3. தீம்பிழி எந்திரம் பந்தல் வருந்த c) திருவாசகம் iii) கனிமவியல் அறிவு
4. ஒருமை தோற்றத்தின் ஐவேறு வனப்பின் d) பதிற்றுப்பத்து iv) வானியல் அறிவு

A. 1(c)(iv), 2(a)(i),3(d)(ii),4(b)(iii)
B. 1(b)(i), 2(d)(ii),3(c)(iii),4(a)(iv)
C. 1(b)(iv), 2(c)(iii),3(a)(ii),4(d)(i)
D. 1(d)(iii), 2(b)(iv),3(c)(ii),4(a)(i)

**29. ஞானபீட விருதினை பெற்ற முதல் தமிழர்?**
A. கல்கி
B. அகிலன்
C. சாலை இளந்திரையன்
D. அப்துல் ரகுமான்

**30. விதை நெல்லை நாற்றங்காலில் எதனை நாட்கள் வைத்து இருப்பர்?**
A. 1721
B. 2125
C. 2529
D. 2933

**31. "அடிகளே தென்னாடு, தென்னாடே அடிகள்" என்று மறைமலை அடிகளை புகழ்ந்தவர் யார்?**
A. சுரதா

B. கலியாண சுந்தரனார்
C. வையாபுரி பிள்ளை
D. பரிதிமாற் கலைஞர்

**32. பொருத்துக:**
1. அரி A. கழுத்து
2. அளபு B. முத்துப்பரல்
3. மிடறு C. வீடு
4. வளவு D. மாத்திரை
A. 1(B), 2(D),3(A), 4(C)
B. 1(C), 2(D),3(A), 4(B)
C. 1(B), 2(D),3(A), 4(C)
D. 1(C), 2(D),3(A), 4(B)

**33. பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவல் கால வகையினானே கூறிய நூல் எது?**
A. திருக்குறள்
B. நன்னூல்
C. தொல்காப்பியம்
D. புறநானூறு

**34. ஐகாரக்குறுக்கத்தின் வகைகள் எத்தனை?**
A. 2
B. 3
C. 4
D. எதுவும் இல்லை

**35. பிரித்து எழுதுக:**
பதிற்றுப்பத்து
A. பதிற்று + பத்து
B. பதிற்றுப் + பத்து
C. பத்து + இன் + இற்று + பத்து
D. பதின் + இற்று + பத்து

**36. பின்வருவனற்றுள் எவற்றில் வல்லினம் மிகாது?**
a. பண்புத்தொகை
B. வினைத்தொகை
C. உவமைத்தொகை
D. ஓரெழுத்து ஒரு மொழி

**37. வாழ்தல் வேண்டி பொய் கூறேன், மெய் கூறுவல் கூறியவர்?**
a. திரு.வி.க
B. நல்லந்துவனார்
C. மருதன் இளநாகனார்
D. வள்ளலார்

**38. இங்கிலாந்து சொல்வதற்கு எல்லாம் இந்தியா தலையசைக்கும் என்பது தவறு. இந்நிலை எப்போதோ மாறிவிட்டது. இந்திய மக்களின் எண்ணங்களை நீங்கள் ஈடேற்ற வேண்டும். கூறியவர்?**
A. அம்பேத்கார்
B. காந்தி
C. முத்துராமலிங்கர்
D. நேதாஜி

**39. பொருத்துக:**
1. அணியன்றோ நாணுடைமை சான்றோர்க்கு அஃது A.இணை மோனை
2. என்பதத்தால் எய்தல் எளிதென்ப யார்மாட்டும் B. கூழை மோனை
3. பாவை விளக்கும் பலவுடன் துரப்புமின் C. ஒருவு மோனை
4. கமழக் கமழத் தமிழிசை பாடினாள் D. பொழிப்பு மோனை
A. 1(B), 2(D),3(A), 4(C)
B. 1(C), 2(D),3(A), 4(B)
C. 1(B), 2(D),3(A), 4(C)
D. 1(C), 2(B),3(D), 4(A)

**40. பிறமொழி சொல் அல்லாதது எது:**
A. உற்சாகம்
B. சங்கடம்
C. அயலார்
D. ஆரோக்கியம்

**41. பொருத்துக:**
1. வேதாரண்யம் A. திருப்பாதிரி புலியூர்
2. கடலூர் B. ஆலவாய்
3. குருகூர் C. திருமறைக் காடு
4. மதுரை D. ஆழ்வார் திருநகரி
A. 1(B), 2(D),3(A), 4(C)
B. 1(C), 2(D),3(A), 4(B)
C. 1(C), 2(D),3(A), 4(B)
D. 1(C), 2(A),3(D), 4(B)

**42.பின்வரும் நூல்களில் பெரும் பிரிவின் அடிப்படையில் பொருந்தாதது எது:**
A. கம்பராமாயணம்
B. சீறாப்புராணம்
C. சீவக சிந்தாமணி
D. வில்லிபாரதம்

**43. பின் வரும் பாடலில் உள்ள பா வகையை கூறுக:**
நீரின் தன்மையும் தீயின் வெம்மையும்
சாராச் சார்ந்து
தீரத் தீரும்
சாரல் நாடான் கேண்மை
சாரச் சாரச் சார்ந்து
தீரத் தீரத் தீர்போல் லாதே

A. நேரிசை ஆசிரியப்பா
B. இணை குறள் ஆசிரியப்பா
C. நிலை மண்டில ஆசிரியப்பா
D. அடிமறிமாற்று ஆசிரியப்பா

**44. பொருத்துக:**
1. வட்கார் மேற் செல்லுதல் A. தும்பை
2. உட்காது எதிர் ஊன்றல் B. வஞ்சி
3. அதிரப் பொருவது C. நொச்சி
4. எயில் காத்தல் D. காஞ்சி
A. 1(B), 2(D),3(C), 4(A)
B. 1(C), 2(D),3(A), 4(B)
C. 1(D), 2(B),3(A), 4(C)
D. 1(B), 2(D),3(A), 4(C)

**45. சுவீடன் நாடு சிறுகதையை "அடித்தளம்" என்ற பெயரில் மொழி பெயர்த்தவர்?**
A. மாடசாமி
B. குப்புசாமி
C. ராமசாமி
D. ஐயாச்சாமி

**46. பொருள் முதல் ஆறினும் தோற்றிமுன் ஆறனுள்**
**வினை முதல் மாத்திரை விழாக்கள் வினைக்குறிப்பே**
**என நன்னூல் இதனை குறிக்கிறது?**
A. தெரிநிலை வினைமுற்று
B. குறிப்பு வினைமுற்று
C. தெரிநிலை பெயரெச்சம்
D. குறிப்பு பெயரெச்சம்

**47. எது சரி:**
A. தொண்ணூற்று ஒன்பது
B. தொன்னூற்று ஒண்பது
C. தொன்னூற்று ஒன்பது
D. தொண்ணூற்று ஒண்பது

**48. சங்கப்புலவர்கள் மொத்தம் எத்தனை பேர்?**
A. 46
B. 48
C. 63
D. 72

**49. பரிதிமாற் கலைஞர் பற்றி பின்வரும் கூற்றுகளில் தவறானது:**
1. பரிதிமாற் கலைஞர் தமிழிலும், ஆங்கிலத்திலும் பல்கலைக் கழகத்தின் முதல் மாணவராகத் தேர்ச்சி பெற்றார்.
2. அவருக்கு ஆக்ஸ் போர்ட் பல்கலைக்கழகம் பணி வழங்க முன் வந்தது, அனால் அவர் அதனை மறுத்து விட்டார்.
3. அவர் தனது வீட்டிற்கு கல்வி கற்க வந்த மாணவர்களை "இயற்றமிழ் மாணவர்கள்" என்று அழைத்தார்.
4. சூரிய நாராயண சாஸ்திரி என்ற தனது வட மொழிப் பெயரை "தனிப்பாசுர தொகை" என்னும் நூலை எழும்போது "பரிதிமாற் கலைஞர்" என்று தமிழில் மாற்றினார்.
A. 1 மட்டும்
B. 2 மட்டும்
C. 3 மட்டும்
D. 4 மட்டும்

**50. பொருத்துக:**
1. பாரி பாரி A. இயற்சீர் வெண்டளை
2. பலர்புகழ் கபிலர் B. நேரொன்றாசிரியத்தளை
3. தாமரைப்பூ குளத்தினிலே C. நிரையொன்றாசிரியத்தளை
4. அக்கறை முதல D. கலித்தளை
A. 1(B), 2(D),3(C), 4(A)
B. 1(B), 2(C),3(D), 4(A)
C. 1(D), 2(B),3(A), 4(C)
D. 1(B), 2(D),3(A), 4(C)

**51. திருந்திய திராவிட மொழிகளின் சரியான வரிசையாக கூறு**
A. தமிழ் மலையாளம் கன்னடம் தெலுங்கு குடகு துளு
B. தமிழ் மலையாளம் தெலுங்கு கன்னடம் குடகு துளு
C. தமிழ் மலையாளம் தெலுங்கு கன்னடம் துளு குடகு
D. தமிழ் தெலுங்கு மலையாளம் கன்னடம் துளு குடகு

**52. திராவிட மொழிகளை மிகுதியாக ஆய்வு செய்துள்ள பல்கலைக்கழகம்?**
A சென்னை பல்கலைக்கழகம் சென்னை
B. அண்ணாமலை பல்கலைக்கழகம் சிதம்பரம்
C. அண்ணா பல்கலைக்கழகம் சென்னை
D பாரதிதாசன் பல்கலைக்கழகம் திருச்சி

**53.பதினெண் கீழ் கணக்கு, பதினெண் மேல் கணக்கு இந்த சொற்களில் "கணக்கு" என்பதன் பொருள் என்ன?**
A. காப்பியம்
B. நூல்
C. உரை
D இலக்கியம்

**54. பின்வருவனற்றுள் தவறானது:**

A. குரவை என்பது பெண்கள் ஏழு அல்லது ஒன்பது பேர் கை கோத்து ஆடும் ஆட்டம்.
B. ஆண்களுக்கு வலக்கண் துடித்தால் நல்லது.
C. பெண்களுக்கு இடக்கண் துடித்தால் நல்லது.
D. "பாண்டில்" என்பது பெண்கள் விளையாடும் விளையாட்டுகளில் ஒன்று.

**55. சிறுபாணாற்றுப் படையில் "ஓய்மான் நாடு" என்று குறிப்பிட படும் பகுதி?**
A. மதுராந்தகம்
B. திண்டிவனம்
C. விழுப்புரம்
D. செங்கல்பட்டு

**56. பின் வரும் நூல்களில் ஆசிரியர் பெயர் தெரியாத நூல்கள்:**
A. முக்கூடற் பள்ளு
B. முத்தொள்ளாயிரம்
C. நந்திக் கலம்பகம்
D. அனைத்தும்

**57. 1 முதல் 8 வரை உள்ள எண்களை எழுத்தால் எழுத, அவற்றில் வரும் மென்தொடர் குற்றியலுகரங்களின் எண்ணிக்கை எத்தனை?**
A. 02
B. 03
C. 04
D. 05

**58. பொருத்துக:**
1. திருமுருகாற்றுப்படை a. மலைப்பாடு கடாம் i. 583
2. பெரும்பாணாற்றுப்படை b. கூடல் தமிழ் ii. 782
3. கூத்தராற்றுப்படை c. கடவுளாற்றுப்படை iii. 317
4. மதுரைக் காஞ்சி d. சமுதாயப் பாட்டு iv. 500
A. 1(c)(iii), 2(d)(iv),3(a)(i),4(b)(ii)
B. 1(b)(i), 2(d)(ii),3(c)(iii),4(a)(iv)
C. 1(c)(iv), 2(d)(iii),3(a)(ii),4(b)(i)
D. 1(d)(iii), 2(b)(iv),3(c)(ii),4(a)(i)

**59. பொருத்துக:**
1. நாமக்கல் கவிஞர் a. துரை மாணிக்கம் i. குஞ்சம்மாள் துரைசாமி
2. சுரதா b. கனக சுப்பு ரத்தினம் ii. கனகசபை லக்குமி அம்மாள்
3. பெருஞ்சித்திரனார் c. வேங்கட மகாலிங்கம் iii. செண்பகம் திருவேங்கடம்
4. பாரதிதாசன் d. இராச கோபாலன் iv. அம்மணி வெங்கட்
A. 1(c)(iii), 2(d)(iv),3(a)(i),4(b)(ii)
B. 1(c)(i), 2(d)(ii),3(a)(iii),4(b)(iv)
C. 1(c)(iv), 2(d)(iii),3(a)(ii),4(b)(i)
D. 1(c)(iv), 2(d)(iii),3(a)(i),4(b)(ii)

**60. பொருத்துக:**
1. நெல்லுக்கு A. ஏரோட
2. கரும்புக்கு B. நண்டோட
3. வாழைக்கு C. தேரோட
4. தென்னைக்கு D. வண்டியோட
A. 1(B), 2(D),3(C), 4(A)
B. 1(B), 2(C),3(D), 4(A)
C. 1(D), 2(B),3(A), 4(C)
D. 1(B), 2(A),3(D), 4(C)

**61. பொருத்தமற்றதை தேர்ந்து எடு:**
A. குஜராத்தி பாடல் இன்னா செய்யாமை
B. சிரவண சிதுர் பக்தி உயிர்களிடத்தில் அன்பு
C. அரிச்சந்திரா நாடகம் சத்யவானாக இருக்க வேண்டும்
D. இயேசுவின் மழை சொற்பொழிவு பகைவரிடத்தில் அன்பு

**62. 5 படலங்கள், 47 பருவங்கள், 3776 பாடல்கள் கொண்ட நூல் எது?**
A. சீறாப் புராணம்
B. இரட்சணிய யாத்திரிகம்
C. பாஞ்சாலி சபதம்
D. உமர்கய்யாம் பாடல்கள்

**63. பின்வருவனற்றுள் சரியானது:**
A. ஆய் அன்பிரன் பொதிகை
B. காரி கொல்லி மலை
C. பறம்புமலை அதியமான்
D. பேகன் தகடூர்

**64. பின்வருவனற்றுள் தவறானது:**
A. துளசி சாற்றினை எலுமிச்சையுடன் கலந்து தேய்த்து வர படை குணமாகும்.
B. கீழ நெல்லியியை எருமை தயிருடன் சேர்த்து வெறும் வயிற்றில் பத்து நாட்கள் உண்டு வர மஞ்சள் காமாலை குணமாகும்.
C. கரிசலாங் கண்ணி செரிமாண கோளாறை சரி செய்யும்.
D. கற்றாழை பெண்களின் கர்ப்ப பை சார்ந்த நோய்களை போக்க வல்லது.

**65. "மணி நகரின் மருங்கு செல்வான் " என்னும் பாஞ்சாலிசபதப் பாடலில் 'மணி நகர்' என்று குறிப்பிடப் படுவது?**
A. அஸ்தினாபுரம்
B. இந்திர புரி
C. அயோத்தி
D. அங்க தேசம்

**66. "அடிகள் நீரே அருளுக! " யார் யாரிடம் கூறியது?**

A. கோவலன் கவுந்தி அடிகளிடம்
B. சீத்தலை சாத்தனார் இளங்கோவடிகளிடம்
C. வள்ளியம்மை காந்தி அடிகளிடம்
D. திகம்பர சாமியார் இராமலிங்க அடிகளிடம்

**67. பொருத்துக:**
1. மடங்கல் A. குரங்கு
2. ஊகம் B. பன்றி
3. கராம் C. சிங்கம்
4. கேழல் D. முதலை

A. 1(C), 2(D),3(B), 4(A)
B. 1(C), 2(B),3(D), 4(A)
C. 1(C), 2(A),3(D), 4(B)
D. 1(B), 2(A),3(D), 4(C)

**68. தவறானது எது?**
A. வன்மையிற் சிறந்தது வாய்மை
B. இளமையிற் சிறந்தது நோய் பிணி இன்மை
C. நலனுடைமையிற் சிறந்தது நாணம்
D. குலனுடைமையிற் சிறந்தது கற்பு

**69. மத்திய அரசு தமிழை செம்மொழியாக அறிவித்த வருடம்?**
A. 2002 அக்டோபர்
B. 2003 அக்டோபர்
C. 2004 அக்டோபர்
D. 2005 அக்டோபர்

**70. பின்வரும் இணைகளில் சரியானது எது?**
A. பாரதி கலைமகள்
B. கண்ணகி கண்களால் சிரிப்பவன்
C. நீலகேசி கரிய கூந்தலை உடையவள்
D. மூன்றுரை அரையனார் மூன்றுரையின் புலவர்

**71. பின்வரும் இணைகளில் சரியானது எது?**
1. பாரதி கலைமகள்
2. கண்ணகி கண்களால் சிரிப்பவன்
3. நீலகேசி கரிய கூந்தலை உடையவள்
4. மூன்றுரை அரையனார் மூன்றுரையின் மைந்தன்

A. 1 மட்டும்
B. 2 மட்டும்
C. 3 மட்டும்
D. 4 மட்டும்

**72. பொருந்தாதது எது?**
அண்பல் முதல் நா விளிம்புற பிறக்கும் எழுத்துக்கள்
A. இ
B. ஈ
C. ஐ
D. ஔ

**73. "கற்றது கைமண் அளவு" என்று பாடிய அவ்வையார் எந்த நூற்றாண்டினை சேர்ந்தவர்?**
A. 10 ம் நூற்றாண்டு
B. 11 ம் நூற்றாண்டு
C. 12 ம் நூற்றாண்டு
D. 13 ம் நூற்றாண்டு

**74. பரஞ்சோதி முனிவரை பற்றி பின்வரும் கூற்றுகளில் தவறானது:**
1. பரஞ்சோதி முனிவர் தமிழிலும், வடமொழியிலும் புலமை பெற்றவர்
2. இவரது தந்தை காமாட்சி தேசிகர்.
3. பரஞ்சோதி முனிவர் துறவியாகி சிவலாயங்கள் தோறும் சென்று இறைவனை வழிபாட்டு வந்தார்.
4. மதுரை நகரத்தார் கேட்டுக் கொண்டதற்கு இங்கக இவர் திருவிளையாடற் புராணத்தை இயற்றினார்.

A. 1 மட்டும்
B. 2 மட்டும்
C. 3 மட்டும்
D. 4 மட்டும்

**75. ஆரணம் என்ற சொல் குறிக்ககாது எது.?**
A. யானை
B. கடல்
C. கோழி
D. முத்து

**76. அக்கறை வரிசைப்படி எழுதுக:**
A. எழிலி எழில் எழால் எழல்
B. எழில் எழல் எழால் எழிலி
C. எழால் எழில் எழிலி எழல்
D. எழல் எழால் எழில் எழிலி

**77. பொருத்துக:**
1. வருவான் A. நிகழ் கால இடைநிலை
2. காணான் B. இறந்தகால இடைநிலை
3. பார்த்தான் C. எதிர்கால இடைநிலை
4. நடக்கிறான் D. எதிர்மறை இடைநிலை

A. 1(C), 2(D),3(B), 4(A)
B. 1(C), 2(B),3(D), 4(A)
C. 1(C), 2(A),3(D), 4(B)
D. 1(B), 2(A),3(D), 4(C)

**78. பிரித்து எழுதுக: வெவ்விருப்பாணி**
A. வெவ்வு + இருப்பு + ஆணி
B. வெவ் + விருப்பு + ஆணி
C. வெம்மை + இரும்பு + ஆணி
D. வெம்மை + இருப்பு + ஆணி

**79. சரியான பகுபத இலக்கணத்தை தேர்ந்து எடு: வந்தெனன்**

A. வ + த் (ந்) + த் + அன் + என்
B. வா + த் (ந்) + த் + அன் + என்
C. வா (வ) + த் (ந்) + த் + அன் + என்
D. வா (வ) + ந் + த் + அன் + என்

**80.பொருத்துக:**
1. நிற்க நேரமில்லை A. க. சச்சிதானந்தன்
2. தமிழ்ப் பசி B. முடியரசன்
3. ஓய்வும் பயனும் C. சாலை இளந்திரையன்
4. யார் கவிஞன் D. பெருஞ்சித்திரனார்
A. 1(C), 2(A), 3(D), 4(B)
B. 1(C), 2(B),3(D), 4(A)
C. 1(C), 2(A),3(D), 4(B)
D. 1(B), 2(A),3(D), 4(C)

**81.அழுக்காறு உடையான்கண் ஆக்கம் போன்று இல்லை**

A. ஒழுக்கம் இல்லாத ஊக்கம்
B. ஒழுக்கம் இலான்கண் ஊக்கம்
C. ஒழுக்கம் இல்லாத உயர்வு
D. ஒழுக்கம் இலான்கண் உயர்வு

**82. பின்வரும் இலக்கண குறிப்பிற்க்கு ஏற்ற சொற்களைத் தேர்ந்து எடு:**
அன்மொழித்தொகை, இருபெயரொட்டு பண்பு தொகை
A. அம்கண், மாமரம்
B. பொருதகர், கருங்குயில்
C. இறுவரை, பைங்கிளி
D. உறியடி, பாசிலை

**83. "தமிழ்நந்தி" என்று புகழப்படும் பல்லவ அரசன் யார்?**
A. முதலாம் நந்திவர்மன்
B. இரண்டாம் நந்திவர்மன்
C. மூன்றாம் நந்திவர்மன்
D. நந்திவர்மன்

**84. காந்தியடிகள் பள்ளியில் படிக்கும் பொழுது எந்த வார்த்தையை தவறாக எழுதினர்?**
A. Cattle
B. Kettle
C. Kattle
D. ketle

**85.கற்றுணை பூட்டி கடலின் பாய்ச்சினும் நற்றுணையாவது நமச்சிவாயமே என்று பாடி, திருப்பாதிரி புலியூரில் கரை சேர்ந்தவர்?**
A. திருஞான சம்பந்தர்
B. திருநாவுக்கரசர்
C. சுந்தரர்
D. மாணிக்க வாசகர்

**86. "ஊன் கலந்து உயிர் கலந்து துவட்டாமல் இனிப்பதுவே" என்று வள்ளலார் புகழும் நூல் எது?**
A. திருப்பல்லாண்டு
B. திருவாய் மொழி
C. திருவிருத்தம்
D. திருவாசகம்

**87. சரியான சொற்றோரை தேர்ந்து எடு:**
A. பஞ்சியொளிர் விஞ்சுகுளிர் பல்லவம் அனுங்க
B. விஞ்சுகுளிர் பஞ்சியொளிர் பல்லவம் அனுங்க
C. விஞ்சுயொளிர் பஞ்சிகுளிர் பல்லவம் அனுங்க
D. பஞ்சிகுளிர் விஞ்சுயொளிர் பல்லவம் அனுங்க

**88.நாமக்கல் கவிஞர் நடத்திய இதழின் பெயர்?**
A. அறிவுக்கடல்
B. லோகமித்ரன்
C. பிரபஞ்சமித்ரன்
D. தாய் தமிழ்

**89. எம்.ஜி. ராமச்சந்திரனுக்கு "பொன்மன செம்மல்" என்ற பட்டத்தினை அளித்தவர் யார்?**
A. அறிஞர் அண்ணாதுரை
B. கலைஞர் கருணாநிதி
C. கிருபானந்த வாரியார்
D. பெரியார்

**90. தமிழ் விடு தூதில் உள்ள மொத்த கணினிகளின் எண்ணிக்கை?**
A. 266
B. 276
C. 286
D. 296

**91. 78521 என்ற அரபு எண்ணின் தமிழ் எண்ணைக் காண்க:**
A. அஎருஉக
B. ருஉகஎஅ
C. எஅருகஉ
D. எஅருஉக

**92. "தவ்வை" எனப்படுபவள்?**
A. சீதேவி
B. மூதேவி
C. திருமகள்
D. மலர்மகள்

**93. பொருத்துக:**
1. அறுவர்க்கு இளைய நங்கை A. பத்ரகாளி
2. இறைவனை ஆடல் கொண்டருளியவள் B. துர்க்கை

3. பேருரம் கிழித்தவள்  C. கொற்றவை
4. பிடரி மயிர்த்தலை பீடம் ஏறியவள்  D. பிடாரி
A. 1(C), 2(B), 3(D), 4(A)
B. 1(D), 2(A),3(B), 4(C)
C. 1(D), 2(A),3(C), 4(B)
D. 1(B), 2(A),3(C), 4(D)

**94. சரியானதைத் தேர்ந்து எடு:**
1. முசிறி சோழ மன்னனின் துறைமுகம், அங்கு சுள்ளி எனும் பெரிய ஆற்றில் யவனர்கள் மரக்கலங்கள் ஆற்றுத்துறைகள் கலங்கிப் போகும்படி வந்து நின்றன.
2. அக் கலங்களுக்கு உரிய யவனர்கள் பொன்னைச் சுமந்து வந்து அதற்க்கு ஈடாக மிளகைப் பெற்று சென்றனர்.
3. இச் செய்தியினை பட்டினப்பாலை கூறுகிறது.
4. பட்டினப்பாலையை எழுதியவர் உருத்திரன் கண்ணனார்.
A. 1, 2 சரி
B. 2, 3 சரி
C. 1, 4 சரி
D. 2, 4 சரி

**95. பின் வருபவர்களில் பாரதியின் குடும்ப உறுப்பினர் அல்லாதவர் யார்?**
A. தங்கம்மா
B. செல்லம்மா
C. கண்ணம்மா
D. சகுந்தலை

**96. பாண்டிய நாட்டின் கொற்கை முத்தினை சிறப்பிக்கும் நூல்கள் எவை?**
A. பட்டினப்பாலை, மதுரைக்காஞ்சி
B. சிறுபாணாற்றுப்படை, மதுரைக்காஞ்சி
C. பட்டினப்பாலை, சிறுபாணாற்றுப்படை
D. பட்டினப்பாலை, புறநானூறு

**97. "மவ்வீறு ஒற்றழிந்து உயிரீரு ஒப்பவும் வந்தமைக்கு இனமாய்த் திரிபாவும் ஆகும் இவ்விதின் படி புணரும் சொல்?**
A. கரு மன்னன்
B. பெருஞ்செல்வம்
C. நிலம் கடந்தான்
D. பேரூர்

**98. முகம்மது நபியின் தாயார் பெயர்?**
A. கதீஜா
B. ஆமினா
C. ஆயிஷா
D. பாத்திமா

**99. "மனிதனின் நோக்கம் உயர்ந்ததாகவும்,** தூய்மையானதாகவும் இருந்தால் மட்டும் போதாது. அதனை அடையும் வழிமுறையும் தூய்மையானதாகவும், பிறருக்குத் துன்பம் தராததாகவும் இருக்க வேண்டும்" யாருடைய கூற்று?
A. காந்தி
B. அம்பேத்கர்
C. விவேகானந்தர்
D. தாகூர்

**100. பொருத்துக**:
1.பொறி வாயில் ஐந்தவித்தான் பொய்தீர் ஒழுக்க நெறி நின்றார் நெடு வாழ்வார்  A. தாப்பிசை பொருள்கோள்
2.இறந்தார் இறந்தார் அனையர் சினத்தைத் துறந்தார், துறந்தார் துணை  B. நிரல் நிறை பொருள்கோள்
3.நெருநெல் உளனொருவன் இன்றில்லை என்னும் பெருமை உடைத்ததில் யுலகு  C. ஆற்றுநீர் பொருள்கோள்
4.அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கைக்குப் பண்பும் பயனும் அது  D. பூட்டுவிற் பொருள்கோள்
A. 1(C), 2(B), 3(D), 4(A)
B. 1(D), 2(A),3(B), 4(C)
C. 1(C), 2(A),3(D), 4(B)
D. 1(B), 2(A),3(C), 4(D)

**விடைகள்:-**

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 01-C | 02-C | 03-B | 04-A | 05-B | 06-D | 07-B | 08-B | 09-D | 10-B |
| 11-D | 12-B | 13-B | 14-C | 15-C | 16-A | 17-B | 18-A | 19-B | 20-B |
| 21-D | 22-C | 23-B | 24-D | 25-C | 26-C | 27-B | 28-A | 29-B | 30-B |
| 31-B | 32-C | 33-B | 34-B | 35-C | 36-B | 37-C | 38-A | 39-D | 40-C |
| 41-D | 42-C | 43-B | 44-D | 45-B | 46-B | 47-A | 48-B | 49-A | 50-B |
| 51-C | 52-B | 53-B | 54-D | 55-B | 56-D | 57-D | 58-A | 59-D | 60-D |
| 61-B | 62-B | 63-A | 64-B | 65-B | 66-B | 67-C | 68-A | 69-C | 70-D |
| 71-D | 72-D | 73-C | 74-B | 75-D | 76-D | 77-A | 78-C | 79-C | 80-A |
| 81-D | 82-A | 83-C | 84-B | 85-B | 86-D | 87-A | 88-B | 89-C | 90-C |
| 91-D | 92-B | 93-B | 94-D | 95-B | 96-B | 97-C | 98-B | 99-A | 100-C |